செய்தி வெளியீடு எண். 810 நாள்–09 .11.2009

# <u>செய்தி வெளியீடு</u>

**2010 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 23 ஆம் நாள் முதல் 27 ஆம் நாள் வரை ஐந்து நாட்களுக்கு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை மாநகரில் – நடைபெற உள்ளதையொட்டி, அதற்குத் தகுதியான இடத்தைத் தேர்வு செய்வது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 6.11.2009 அன்று கோவை மாநகருக்குச் சென்றபோது, ‘‘கொடிசியா’’ எனப்படும் கோவை மாவட்ட சிறுதொழில் முனைவோர் சங்கத்திற்குச் சொந்தமான அரங்குகளையும், அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் பார்வையிட்டு, கோவை மாவட்ட அமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசனை செய்தார்கள். அதன் அடிப்படையில், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்குக் கோவை ‘‘கொடிசியா’’ அரங்கு தகுதியான இடம் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தேர்வு செய்து அறிவித்துள்ளார்கள்.**

*** * ***

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9